கோயம்புத்தூரில் வானொலிப் பெட்டிகள் உற்பத்தி

* 665. வினா.—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவையில் ரேடியோ தொழிற்சாலை ஒன்று தனியார் துறையில் தொடங்கப்படவிருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(உ) அதன் உற்பத்தித் திறன் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) & (உ) கேள்விக்கு இடமில்லை.

THIRU K. VINAYAKAM : Is it not a fact that one industrialist by name Mr. G. D. Naidu is supposed to have constructed a radio set called 'People's Radio' at a cost of Rs. 25 per set? If so, would the Government think of the possibility of ordering these sets from the industrialist so as to use them in Government sector, whereever panchayat unions are to be supplied with rural sets?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கேள்வி புதிய தொழிற்சாலை தொடங்கப்பட இருக்கிறதா என்பது. இல்லையென்று சொன்னேன்.

ஹாஜி ம. மு. பீர்முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் துறையிலே தொடங்குகின்ற முயற்சி இல்லையென்றாலும் வானொலியின் மூலம் விவசாய அறிவும், பொது அறிவும் பெறுகின்ற நிலை பரவலாக மக்களிடம் இருக்கின்ற காரணத்தினாலே அரசே வானொலிப் பெட்டிகளை உற்பத்திசெய்கின்ற தொழிற்சாலையை தமிழ்நாட்டிலே துவக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கனம் உறுப்பினர் விநாயகம் சொன்னதைப்போல் இப்பொழுதே வானொலிப் பெட்டிகள் தயாரிக்கப்படுகின்றன. புதிய தொழிற்சாலை பற்றி அவர்கள் கேள்வி கேட்டார்கள். இல்லை என்று சொன்னேன். நம் நாட்டிலே இப்பொழுதே பலவிதமான வானொலிப் பெட்டிகள் இருக்கத்தான் செய்கின்றன.

THIRU K. VINAYAKAM : When the Congress Party was in power Mr. G. D. Naidu was complaining that the Government was not making use of his talent, supposed talent. in manufacturing these sets and the party which is in power now was then championing his cause. Now that you are in power, why can't you utilise his supposed talents which you have elaborated and propagated in those days?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : திரு. ஜி. டி. நாயுடு அவர்களின் அறிவாற்றலை இப்பொழுதாவது கனம் அங்கத்தினர் அவர்கள்

சொன்னது மகிழ்ச்சிக்குரியதாகும். அவர்கள் சொன்னது தவறாகும். இந்த அரசாங்கம் அப்படிச் செய்யவேண்டுமென்று எந்தக் காலத்திலும் சொல்லவில்லை. மத்திய அரசாங்கம் தங்களுடைய சட்டத்தாலோ அல்லது வரியினாலோ கொடுமைப்படுத்துகிறது, தொழில்கள் தொடங்க அனுமதி மறுக்கிறது என்று சொன்னார்கள். ஒருவேளை போராட்ட காலத்திலே திரு. விநாயகம் அவர்கள் வந்திருக்கின்ற காரணத்தினாலே அப்படிக் கேட்கலாம். அதுகூட மத்திய அரசாங்கத்தை அவர்கள் கேட்க வேண்டும்.

நீதிமன்றங்களை அவமதிப்பது குறித்த மசோதா

*666' வினா.—திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நீதிமன்றங்களை அவமதிப்பது குறித்த மசோதா மீது நாடாளுமன்றத்தின் கூட்டு ஆய்வுக் குழு சென்னை மாநகரிலும், தமிழ்நாட்டின் பிற இடங்களிலும், அண்மையில் விசாரணை நடத்தியபோது அதன்முன் தமிழ்நாடு அரசு தனது கருத்துக்களை அளித்ததா ?

(இ) ஆமெனில், அதுகுறித்த விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

நிலவள வங்கிகள்

* 667. வினா.—திரு. என். எஸ்' வி' சித்தன் :
திரு. எம். சுரேந்திரன்.
திரு. வை. சுவாமிநாதன்
திரு. எம். முத்தையா.

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நிலச் சீர்திருத்தம் செய்யும் விவசாயிகளின் நன்மையை உத்தேசித்து Land Development Banks ஆரம்பிக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம்.

(ஆ) இம்மாநிலத்தின் பல்வேறு வட்டாரங்களில் 60 நிலவள வங்கிகள் தொடங்க அரசு அண்மையில் ஆணை பிறப்பித்துள்ளது. இத்திட்டம் குறித்த விவர அறிக்கை [a] ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது. தலைவர் அவர்களே, இந்த விடை தயாரிக்கப்பட்ட பின்னர் மேலும் 7 நிலவள வங்கிகளைத் தொடங்கப் போவதாக அரசு ஆணை பிறப்பித்து இருக்கிறது.

[a] 278–281-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.